செ.வெ.எண்.46/2017 நாள்:23.03.2017

**<u>சிவகங்கை மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம் 02.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய தினங்களில் நடைபெறுவதை முன்னிட்டு</u>**

**<u>மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப.,அவர்கள் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.</u>**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சிவகங்கை மாவட்டத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம் 02.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய தினங்களில் நடைபெறுவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப.,அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், போலியோ நோயை நம்நாட்டை விட்டு முற்றிலும் அகற்றுவதற்காக 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தேசிய அளவில் 02.04.2017 மற்றும் 30.04.2017 அன்றும் இரண்டு தவணைகளாக போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 1,35,634 குழந்தைகளுக்கு 02.04.2017 அன்று 1,192 நிரந்த மையங்களிலும், (அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்நல மையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிக்கூடங்கள்) 61 நடமாடும் மையங்களிலும், 17 பஸ் நிலையங்களிலும் நடைபெறும் போலியோ சொட்டு மருந்து முகாம் மூலம் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட உள்ளது. இதற்கு முன்னேற்ப்பாடாக போலியோ சொட்டு மருந்தின் குளிர்பதன நிலையை பாதுகாக்க தடையில்லா மின்சாரம் வழங்கவும், மருந்துப் பெட்டிகளை சொட்டு மருந்து வழங்கும் மையங்களுக்கு கொண்டு செல்ல அனைத்துத்துறை சார்ந்த வாகனங்களை ஒதுக்கி தரவும், சொட்டு மருந்து மையத்திற்கு தேவையான இடவசதி செய்து தரவும் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்.

இம்முகாம்கள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்கள் மற்றும் ஊட்டச்சத்து மையங்களில் நடைபெற உள்ளது. இம்முகாம்களில் பொது சுகாதாரத்துறை, சமூகநலத்துறை, ஊட்டச்சத்துத்துறை, வருவாய்த்துறை, கல்வித்துறை மற்றும் பிறதுறைகளைச் சார்ந்த 5,500 பேர் பணியாற்ற உள்ளனர்.

எனவே, பொதுமக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி தங்களின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்கனவே கொடுத்திருந்தாலும், மீண்டும் போலியோ சொட்டு மருந்து கொடுத்து போலியோ நோயை முற்றிலும் அகற்ற உதவுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி.,இ.ஆ.ப., தெரிவித்தார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.